# குகை மேல்நிலைப் பள்ளி

## காலாண்டுத் தேர்வு – +2 வணிகவியல் விடைக்குறிப்புகள் 2019 -20

### பகுதி I

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. மேலாளர் (அ)
2. டெய்லர் (ஆ)
3. முடிவெடுத்தல் (அ)
4. குறியிலக்கு மேலாண்மை (ஆ)
5. நீண்ட கால நிதி (இ)
6. 1992 (ஆ)
7. குறுகிய கால நிதிகள் (ஆ)
8. 21 / **24** (அ. ஆ)
9. 1998 (அ)
10. பரஸ்பர நிதி (அ)
11. கண்ணுக்குப் புலனாகா (ஆ)
12. புற வளங்கள் (ஆ)
13. எதிர்மறை (ஆ)
14. பயிற்சி திணைக்களத்தில் (இ)
15. சந்தையிடுகையாளர் (ஆ)
16. பண்ட மாற்று முறை (இ)
17. தேசிய சேமிப்பு பத்திரங்கள் (இ)
18. திட்டமிடதல் இல்லாமல் எந்த காரியமும் செய்ய முடியும (ஈ)
19. திட்டக்கூறு (இ)
20. அவர்களின் வாடிக்கையாளர்களுக்காக (ஆ)

### பகுதி II

21. **மேலாண்மை என்றால் என்ன ?**

- ✓ மேலாண்மை என்பது மற்றவர்களின் முயற்சி மற்றும் ஒத்துழைப்புடன் நோக்கங்களை எய்தும் ஒரு கலையாகும்.
- ✓ தொழிலமைப்பின் இலக்குகளை வெற்றிகரமாக எய்துவதற்கும் வியாபாரத்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கும் உதவுவது மேலாண்மை ஆகும்.

22. **திட்டமிடுதல் என்றால் என்ன ?**

- ✓ திட்டமிடுதல்என்பது மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது ஆகும்.
- ✓ திட்டமிடுதல் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்யமுடியாது.
- ✓ திட்டமிடுதல் என்பது முன்கூட்டியே முடிவெடுப்பதைக் குறிக்கிறது.
- ✓ திட்டமிடுதல் என்பது வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்க பூர்வமான மதிப்பீடு ஆகும்.

23. 23. **குறியிலக்கு மேலாண்மை என்றால் என்ன ?**

- ✓ ஒரு அமைப்பில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் திறம்பட மற்றும் சுய ஈடுபாட்டுடன் பங்கு வகிக்கும் ஒரு நிர்வாக முறையே குறியிலக்கு மேலாண்மை ஆகும்.
- ✓ குறியிலக்கு மேலாண்மையானது நிறுவனத்தின் குறிக்கோள்களுடன் ஒரு தனி நபரின் குறிக்கோள்களை ஒன்றிணைத்துச் செல்கிறது.

**24.** 24. நிதிச்சந்தை – சிறு குறிப்பு வரைக

- ✓ எந்த ஒரு சந்தையில் நிதி கோரல்கள் , சொத்துக்கள் மற்றும் பத்திரங்கள் போன்ற நிதிக் கருவிகள் வியாபாரம் செய்யப்படும் சந்தை நிதிச் சந்தை ஆகும்.

25. **OTCEI** – சிறு குறிப்பு வரைக.

**OTCEI** – இந்திய உடனடி பங்கு மாற்றகம்.பங்குகளை இந்தியா முழுவதும் மின்னனு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே **OTCEI** என்பதாகும்.

26. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன ?

அரசு அல்லது தங்க முனை பத்திரங்களை வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு 'அரசு பத்திரங்கள் சந்தை' என்று பெயர்.

குகை மேல்நிலைப் பள்ளி

காலாண்டுத் தேர்வு – +2 வணிகவியல் விடைக்குறிப்புகள் 2019 -20

**27. பங்குச் சந்தை வரைவிலக்கணம் தருக.**

- ✓ "பங்குச் சந்தை மாற்றங்கள் தனிப்பட்ட முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட சந்தைகள் பத்திரங்களில் வர்த்தகத்தை எளிதாக்கும்" – ஹஸ்பண்ட் மற்றும் டோகேர்ரி.

28. செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.

- ✓ முதலீட்டாளர்களை பாதுகாப்பது
- ✓ உள்வழிவியாபாரத்தை சரிபார்த்தல்
- ✓ தரகர் மீதான கட்டுப்பாடு
- ✓ பங்கு பரிவர்த்தனைகளின் ஒழுங்குமுறை

29. மனித வள மேலாண்மை என்றால் என்ன ?

- ✓ மனித வள மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தில் ஆட்களை பணியமர்த்தல், ஊக்குவித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான மேலாண்மை பணியை செய்வதாகும்.

30. நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன ?

- ✓ நுண்ணறிவுத் திறன் சோதனை என்பது ஒருவகை உளவியல் ரீதியிலான சோதனை ஆகும்.
- ✓ மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன் நுண்ணறிவு போன்றவற்றை சோதிக்க பயன்படும்.
- ✓ நுண்ணறிவு எண் என்ற அளவீட்டால் இது அளவிடப்படுகிறது.

## பகுதி III

31. டேலரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை ?

- ✓ அறிவியல் கட்டை விரலின் விதி அல்ல
- ✓ இணக்கம் சச்சரவின்மை
- ✓ மனப்புரட்சி
- ✓ தனிமனிதத் தத்துவம் அல்ல ஒத்துழைப்பு
- ✓ ஒவ்வொருவருக்கும் அவரவரது திறமைக்கும் செழிப்புக்குமான வளர்ச்சி

32. இயக்குதலின் முக்கியத்துவம் எவை?

- ✓ தற்போதைய இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயலூக்கமளித்தல், முன்னணியிலிருத்தல், வழிகாட்டுதல், மற்றும் கீழ் நிலைப் பணியாளர்களுடன் தொடர்புபடுத்துதல் போன்றன இயக்குதலைக் குறிக்கிறது.
- ✓ அமைப்பின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பணியாளர்களை இயக்கும் பொருட்டு சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் கையேடுகள், செய்திமடல்கள், அறிவிப்பு பலகைகள், கூட்டம், பங்கேற்பு இயக்கம் ஆகியவற்றின் மூலமாக பணியாளர்களுக்கு தேவையான அனைத்து விபரங்களுக்கும் உரிய தகவல் தெரிவிக்கப்படுகிறது.

1. 33. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக.

- ✓ குறுகிய கால இலக்குகளுடன் நிறுவனத்தின் நீண்டகால இலக்குகளை இணைக்க குறியிலக்கு மேலாண்மை முயற்சி செய்கிறது.
- ✓ சமுதாய குறிக்கோள்களுடன் அமைப்பின் குறிக்கோள்களை தொடர்புபடுத்த முயற்சி செய்கிறது.
- ✓ குறியிலக்கு மேலாண்மை இலக்குகளை மட்டும் அடையச் செய்வதல்ல திறமையான செயல் திறனையும் அடையச் செய்கிறது.
- ✓ இலக்கு அமைக்கும் செயல்பாட்டில் ஊழியர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கிறது.

3. 34. இரண்டாம் நிலைச் சந்தை – சிறு குறிப்பு வரைக.

- ✓ நிறுமத்தில் முன்னரே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச்சந்தை ஆகும்.
- ✓ இரண்டாம் நிலைச்சந்தையில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.
- ✓ இரண்டாம் நிலைச் சந்தை நிறுமங்களுக்கு நிதி வழங்குவதில்லை.
- ✓ இரண்டாம் நிலைச் சந்தையில் தேவை மற்றும் அளிப்பைப் பொறுத்து விலையானது நிர்ணயிக்கப்படுகிறது.
- ✓ முதலீட்டாளர்களுக்கு இடையே வாங்கல் விற்றல் நடைபெறுகிறது.

35. மூலதனச் சந்தையின் பல்வேறு வகைகள் என்ன ? விளக்குக

முதல்நிலைச் சந்தை –

- ✓ முதல்நிலைச் சந்தை என்பது புதிய வெளியீடுகளுக்கான ஒரு சந்தை ஆகும்.
- ✓ இது புதிய வெளியீடுகள் சந்தை எனவும் அழைக்கப்படுகிறது.
- ✓ முதல்நிலைச் சந்தை பொது மக்களுக்கு முதன் முதலில் வெளியிடும் பத்திரங்களை கையாளுகிறது.

- ✓ முதல்நிலை சந்தையில் கடனாளிகள் நீண்டகால நிதிக்காக புதிய நிதி பத்திரங்களை மாற்றம் செய்து கொள்கின்றனர்.

இரண்டாம் நிலை சந்தை –

- ✓ ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்களுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை என வரையறுக்கப்படுகிறது.
- ✓ ஏற்கனவே முதல்நிலைச் சந்தையில் வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்கள் இங்கு வணிகம் செய்யப்படுகின்றன.
- ✓ பங்கு மாற்றகம் உடனடி மாற்றகம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியுள்ளது.

36. **வணிக இரசீதின் வகைகளை விவரி .**

தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள்

- ✓ தேவை இரசீது என்பது பணம் செலுத்துவதற்கான தேதி எதுவும் குறிப்பிடப்படாத இரசீது ஆகும்.
- ✓ தேவை இரசீதை வைத்திருப்பவர் தனக்கு எப்பொழுது பணம் தேவைப்படுகிறதோ அப்போது அந்த இரசீதுக்கு பணம் பெற்றுக் கொள்ளலாம்.

தூய்மை இரசீதுகள் மற்றும் ஆவண இரசீதுகள்

- ✓ பொருட்களின் உரிமை ஆவணம் மூலம் இணைக்கப்பட்ட இரசீதுகள் ஆவண இரசீதுகள் என்று அழைக்கப்படுகிறது.
- ✓ எந்த ஒரு ஆவணமும் எழுதி இணைக்கப்படாத இரசீதுகள் தூய்மை இரசீதுகள்ஆகும்.
- ✓ உதாரணம் – தொடர்வண்டி இரசீது மற்றும் சரக்குந்து இரசீது.

உள்நாடு மற்றும் அயல்நாட்டு இரசீதுகள்

- ✓ இந்தியாவில் குடியிருக்கும் ஒரு நபருக்கு இந்தியாவில் எழுதப்பட்ட மற்றும் செலுத்த வேண்டிய இரசீதுகள் உள்நாட்டு இரசீதுகள் ஆகும்.
- ✓ அயல்நாட்டு இரசீதுகள் என்பது இந்தியாவிற்கு வெளியே எழுதப்பட்டு இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ செலுத்தப்படும் இரசீதுகளை அயல்நாட்டு இரசீதுகள் எனலாம்.

தனித்துவமான இரசீதுகள்

- ✓ தனித்துவமான இரசீதுகள் என்பது வரைதல் மற்றும் ஏற்றுக் கொள்ளல் உள்ளூர் வழக்கப்படி அல்லது வர்த்தகப் பயன்பாட்டின் மூலம் நிர்வகிக்கப்படுவதைக் குறிக்கிறது.

இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள்

- ✓ இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள் என்பது உண்மையான வியாபார நடவடிக்கைகள் அல்லாமல் உருவாக்கப்படும் இரசீதுகளை இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள் எனலாம்.

37. காளை மற்றும் கரடி விளக்குக.

**காளை ;–**

- ✓ பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊகவணிகர்

காளை என்றழைக்கப்படுவர்.


- ✓ இவ்வகை ஊகவணிகர் தெஜிவாலா என்றும் அழைக்கப்படுவர்.
- ✓ இவர்கள் எதிர்காலத்தில் அதிக விலையில் பத்திரங்களை விற்க இயலும் என்ற எண்ணத்தில் தற்போது பத்திரங்களை வாங்குகின்றனர்.
- ✓ ஒரு காளை தன்னுடைய கொம்புகளால் எதிரிகளை மேல் நோக்கி தூக்கி எறிவது போல இந்த வகை ஊகவணிகர்கள் பிணையப் பத்திரங்களின் விலையை உயரச் செய்யும் நோக்கோடு செயல்படுவர்.
- ✓ இவர்கள் எல்லாம் நன்மைக்கே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்கள்.

கரடி ;–

- ✓ எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணம் கொண் ஊக வணிகர் கரடி அல்லது மண்டிவாலா ஆவர்.
- ✓ இவ்வகை ஊகவணிகர், பங்குகளைப் பின்னர் குறைந்த விலையில் வாங்க முடியும் என்ற எண்ணத்தில் தான் வைத்திருக்கும் பங்குகளைத் தற்போது அதிக விலையில் விற்பனை செய்வர்.
- ✓ ஒரு கரடி, பொதுவாகத் தன்னுடைய எதிரியைத் தரையில் தள்ளி அழுத்துகிறது.
- ✓ அதே போல ஒரு கரடி ஊகவணிகரும், பங்குச் சந்தையில் பங்குகளின் விலையைக் கீழே தள்ளுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.
- ✓ ஒரு கரடி ஊகவணிகர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

38. **செபி அமைப்பின் கட்டமைப்புகளை வரைக.**

## குகை மேல்நிலைப் பள்ளி
## காலாண்டுத் தேர்வு – +2 வணிகவியல் விடைக்குறிப்புகள் 2019 -20




**39. மனித வளத்தின் முக்கியத்துவம் என்ன ?**

i. மனித வளத்தின் மூலமாக மட்டுமேமற்ற அனைத்து வளங்களும் திறம்பட பயன்படுத்தப்படுகின்றன.

ii. ஒரு நிறுவனத்தின் நிலையான வளர்ச்சி முக்கிய வளமானமனித வளத்தை சார்ந்துள்ளது.

iii. தொழில்துறை உறவுகள் மனித வளத்தை சார்ந்துள்ளது.

iv. மனித வளங்கள் மூலமாக மட்டுமே மனித உறவுகள் சாத்தியமாகிறது

v. மனித வளமானது பிற அனைத்து உற்பத்தி காரணிகளையும் நிர்வகிக்கிறது.

vi. பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் மூலம் மனித வளங்களின் திறனை மேம்படுத்த முடியும்.

**40. மனோபாவச் சோதனை என்றால் என்ன ?**

- ✓ மனோபாவச் சோதனை என்பது குறிப்பிட்ட பணிக்கு விண்ணப்பதாரர் எந்த அளவிற்கு பொருத்தமானவர் என்பதை அளவிட உதவுகிறது.
- ✓ இச்சோதனை பணியாளரின் பன்முகத் திறன்களை அளவிடவும்
- ✓ பணியாளரின் எதிர்கால செயல்திறனை முன்கணிக்கவும் பயன்படுகிறது.

## பகுதி IV

**41. மேலாண்மைக்கு பீட்டர் டிரக்கரின் பங்களிப்பு யாது ?**

1. வணிகத்தை மேலாண்மை செய்தல்
2. மேலாளரை மேலாண்மை செய்தல்
3. பணியாளர்களையும் பணியையும் மேலாண்மை செய்தல்.

- ✓ இதில் ஏதேனும் ஒன்று விடுபட்டாலும் எவ்வித செயலையும் மேலாண்மை செய்ய இயலாது.

- ✓ மேலும் வணிக நிறுவனத்தையோ அல்லது தொழில் சமூகத்தையோ நிர்வகிக்க இயலாது.
- ✓ மேற்கூறிய அனைத்தையும் ஒருங்கிணைத்து செயல்படுபவது மேலாளர் கடமையாகும்.
- ✓ ஒவ்வொரு வணிகத்திலும் அதன் மேலாளர் சூழ்நிலைக்குகேற்ப மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டவராகவும் வியாபாரத்திற்கு உயிர் கொடுப்பவராகவும் செயல்படுகிறார்.
- ✓ திறம்பட செம்மையான மேலாண்மை இல்லாமல் மனித வளம் , பொருட்கள் , நிதி வளங்களையும் திறமையாக ஒதுக்கீடு செய்யவும் மற்றும் முழுவதுமாக பயன்படுத்தவும் இயலாது.

அல்லது

41. **சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி.**

**பண்டமாற்று முறை**

பண்டங்களுக்கு இணையாக பண்டங்களை மட்டுமே மாற்றிக் கொண்டதே பண்டமாற்று முறை ஆகும். வேறு எந்தவித மாற்றுக்களும் நடைபெறவில்லை.

**உற்பத்தி சார்ந்து**

நுகர்வோரின் விருப்பங்களுக்கு மாறாக லாப நோக்கத்தோடு அதிக அளவில் உற்பத்திக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

வாடிக்கையாளர்களுக்கு சிறிய அளவிலான முக்கியத்துவமே இக்காலக்கட்டத்தில் வழங்கப்பட்டது.

**விற்பனை சார்ந்து**

இன்றைய பொருளாதார நிலை வாழ்க்கையின் மாற்றத்திற்கு ஒரு முன் உதாரணமாக திகழ்கிறது. விற்பனையே ஒரு முற்போக்கு காரணியாக கருதப்படுகிறது. மேலும் நுகர்வோரின் தேவையை திருப்திபடுத்தும் வகையில் எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

**சந்தையிடுகை சார்ந்து**

வாடிக்கையாளர்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

ஆனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்று தீர்ப்பதில் மட்டுமே. அதிக போட்டி இருந்து வந்துள்ளது.

தனியாள் விற்பனை மற்றும் அதிக அளவினை விற்பனை மேம்பாடு, போன்றவற்றை விற்பனை ஊக்கிகளாக பயன்படுத்தப்பட்டது.

**நுகர்வோர் சார்ந்தது**

இந்த நிலையில் மட்டுமே மேம்படுத்தபட்ட பொருட்கள் சந்தைக்கு கொண்டு வரப்பட்டது

நுகர்வோருக்கு மனநிறைவு ஏற்படுத்தும் வகையில் சுவை, விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

**மேலாண்மை சார்ந்தது**

சந்தையிடுகை ஒரு மேலாண்மை பணியினை மேற்கொள்கிறது நுகர்வோரின் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடல், பொருள் மேம்பாடு செய்தல் மற்றும் வினியோகம் செய்தல் போன்றவற்றை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

42. **சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரி.**

I. **புவியியல் அடிப்படையில்**

**குடும்ப சந்தை**

ஒரு குடும்பத்தில் அல்லது குடும்பத்தின் நெருங்கிய உறுப்பினர்களிடையே பண்டங்களையோ அல்லது பணிகளையோ பரிமாறிக் கொள்ளப்படும் வகையில் உள்ளச ந்தையை குடும்பசந்தை என அழைக்கப்படுகிறது

**உள்ளூர் சந்தை**

உள்ளூரிலேயே வாங்குவோரும், விற்போரும் பங்கேற்கும் வகையில் ஒரு குறிப்பிட்ட பொருட்களுக்காக
உள்ள ஒரு சந்தையை உள்ளூர் சந்தை என்று அழைக்கப்படுகிறது.

எளிதில் அழுகக்கூடிய பொருட்களாகிய பால், பழங்கள், மீன், காய்மற்றும் கனிகள் போன்றவை விற்கப்படும்.

தேசிய சந்தை

பண்டங்கள் மற்றும் பணிகள் ஒரு நாட்டின் பல்வேறு மூலை முடுக்குகளிலும் கிடைக்கப்பெறும் வகையில் அமையப் பெற்ற சந்தையை தேசிய சந்தை எனலாம்.

பன்னாட்டு சந்தை அல்லது உலகளாவிய சந்தை

பண்டங்கள் மற்றும் பணிகளை பன்னாட்டு அளவில் சந்தையிடுகை செய்வதனை பன்னாட்டு சந்தை அல்லது உலகளாவிய சந்தை என அழைக்கப்படுகிறது.
வாங்குவோர் மற்றும் விற்போர் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே சந்தையிடுகையில் ஈடுபடுபவர்.

II. பண்டகங்களின்/ பொருட்களின் அடிப்படையில்

பண்டக சந்தை

இத்தகைய சந்தையில் உற்பத்தி பொருட்கள் அல்லது நுகர்வு பொருட்கள் போன்றவை வாங்குதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

உற்பத்தி பொருள் மாற்று சந்தை

இத்தகைய சந்தையானது ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி அடைந்த தொழில் மையத்திலோ அல்லது நகரத்திலோ மேற்கொள்ளப்படுகிறது.
ஒரு குறிப்பிட்ட பொருள் மட்டுமே இங்கு சந்தையிடுகை செய்யப்படுகிறது.

தயாரிப்பு பொருள் மாற்று சந்தை

தொழிற்சாலை சார்ந்தஉற்பத்தி ப ொருட்கள் இவ்வகைசந்தையில் மேற்கொள்ளப்படுகிறது. எ.கா. தோல், இயந்திரசாதன பொருட்கள்

தூய உலோகச் (பொன்) சந்தை

இத்தகைய சந்தையானது தங்கம் மற்றும் வெள்ளி போன்ற பொருட்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதை குறிக்கிறது.

மூலதனசந்தை

பண சந்தை

குறுகிய காலப் பத்திரங்கள் பரிமாற்றப்படுகிறது. மேலும் இவ்வகை சந்தையின் மூலம் வியாபார நிறுவாக வங்கிகள், நிதி நிறுவனங்களுக்கு தேவையான குறுகிய பணத்தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது.

அந்நிய செலவாணி சந்தை

இது ஒரு சர்வதேச சந்தையாகும்,

அந்நிய நாட்டு நாணயங்களை வாங்கல் மற்றும் விற்றல் நடவடிக்கையை மேற்கொள்கிறது

ஏற்றுமதியாளர் மற்றும் இறக்குமதியாளர்கள் தங்களது நாணயங்களை வெளிநாட்டு நாணயங்களாக மாற்றிக் கொள்வதற்கும் வழிவகை செய்கிறது.

பங்கு சந்தை

பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் போன்றவற்றை வாங்கல் மற்றும் விற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.
இச்சந்தையை பாதுகாப்பு சந்தை எனவும் அழைக்கலாம்.

III. பொருளாதாரத்தின் அடிப்படையில்

முறையான(செம்மையான) சந்தை

இவ்வகை சந்தையில் ஒரே இயல்பான தன்மை கொண்ட பண்டங்கள் மற்றும் பணிகளை ஒரேவிதமான விலையின் அடிப்படையில் கையாளப்படுகிறது.

முறையற்ற அல்லது செம்மையற்ற சந்தை

இவ்வகை சந்தை பல்வகை பொருட்கள் மற்றும் பல்வேறு விலைகளை கொண்டுள்ளது.
ஒரே தன்மை மற்றும் விலை கொண்ட பொருட்கள் இச்சந்தையில் மேற்கொள்ளப்படமாட்டாது.

IV. நடவடிக்கைகளின் அடிப்படையில்

குகை மேல்நிலைப் பள்ளி

காலாண்டுத் தேர்வு – +2 வணிகவியல் விடைக்குறிப்புகள் 2019 -20

**களச்சந்தை**

பொருளுக்கான விற்பனை நடவடிக்கை முடிவடைந்த அதே நேரத்தில் அப்பொருள் விநியோகம் செய்வது மட்டுமன்றி உடன் உரிமை மாற்றமும் செய்யப்படுகிறது.

**எதிர்காலசந்தை**

இத்தகைய சந்தையில் பொருட்கள் விநியோகம் செய்தபிறகு அதற்கான தொகை எதிர்வரும் காலங்களில் வழங்குவதாக ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் நடைபெறும் சந்தையை எதிர்கால சந்தை எனலாம்.

V. **ஒழுங்குமுறை அடிப்படையில்**

**ஒழுங்குமுறை சந்தை**

அரசின் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு சந்தை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

ஒழுங்கு முறையற்றசந்தை

இவ்வகை சந்தையானது அரசின் சட்ட விதிகளால் கட்டுப்படுத்துவது அல்ல. சந்தையின் செயல்பாடுகள் பொருட்களின் தேவை மற்றும் அளிப்பின் அடிப்படையில் நிகழ்கிறது.

இது ஒரு கட்டுபாடற்ற சந்தையாகும்.

VI. **காலத்தின் அடிப்படையில்**

- ✓ மிகக் குறுகிய கால சந்தை – மிக குறுகிய காலத்தில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மட்டும் கையாளப்படுகிறது.
- ✓ குறுகிய கால சந்தை – ஒரு சில பொருட்கள் சந்தையில் தேவையின் அளிப்பை சமாளிப்பதற்கு அளிப்பின் அளவு அதிகரிக்கப்படுகிறது.
- ✓ நீண்ட கால சந்தை – நீடித்து உழைக்ககூடிய பொருட்கள் இச்சந்தையில் கையாளப்படுகிறது.

VII. **தொழில் அளவின் அடிப்படையில்**

**மொத்த விற்பனை சந்தை**

உற்பத்தியாளரிடமிருந்து மொத்தமாக கொள்முதல் செய்து சில்லறை வியாபாரிக்கு மொத்தமாக விற்பனை செய்வதே மொத்த விற்பனை சந்தை ஆகும்.

**சில்லறை விற்பனை சந்தை**

மொத்த வியாபாரியிடமிருந்நது மொத்தமாக பொருட்களை வாங்கி அதை நுகர்வோருக்கு விற்பதே சில்லறை விற்பனை சந்தை ஆகும்.

VIII. **முக்கியத்துத்தின் அடிப்படையில்**

**முதன்மைசந்தை**

வேளாண் விளை பொருட்கள் மட்டுமே இத்தகைய சந்தையில் வாங்குவது மற்றும் விற்பனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**இரண்டாம்நிலைசந்தை**

இவ்வகை சந்தையில் முற்றுப் பெறாத தயாரிப்பு பொருட்கள் மட்டுமே சந்தையிடுகை செய்யப்படுகிறது. முடிவுற்ற பொருட்கள் வாங்குவது மற்றும் விற்பனை செய்வது அல்ல.

அல்லது

42. **மேலாண்மையின் முக்கிய பணிகளை கூறி விளக்குக.**

திட்டமிடுதல் –

- ✓ திட்டமிடுதல் என்பது மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது ஆகும்.
- ✓ திட்டமிடுதல் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்ய முடியாது.
- ✓ திட்டமிடுதல் என்பது முன்கூட்டியே முடிவெடுப்பதைக் குறிக்கிறது.
- ✓ திட்டமிடுதல் என்பது வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்க பூர்வமான மதிப்பீடு ஆகும்
- ✓ தற்போதைய நடவடிக்கைகளை நிறுவப்பட்ட இலக்கிற்கேற்ப சரிசெய்து கொள்ள திட்டமிடுதல் உதவுகிறது.

ஒழுங்கமைத்தல்

- ✓ ஒரு அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையில் இணக்கமான உறவை ஏற்படுத்துவதும், ஒரு வலைப்பின்னல் போன்ற அமைப்பை அவர்களது உறவுகளுக்கு இடையில் உருவாக்கும் செயல்முறையே ஒழுங்கமைத்தல் ஆகும்.

**பணிக்கமர்துதல்**

- ✓ பணிக்கு பொருத்தமான நபர்களை தேர்ந்தெடுப்பது, தேவையான நபர்களுக்கு பயிற்சி அளிப்பது, சிறந்த நபர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது, பழைய நபர்களுக்கு ஓய்வு அளிப்பது, அனைத்து நபர்களின் செயல்திறன்களை மதிப்பீடு செய்வது மற்றும் பணியாளர்களுக்கு போதுமான ஊதியம் வழங்குவது ஆகியன பணிக்கமர்த்துதலில் அடங்கியுள்ளது.

இயக்குவித்தல்

- ✓ தற்போதைய இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயலூக்கமளித்தல், முன்னணியிலிருத்தல், வழிகாட்டுதல், மற்றும் கீழ் நிலைப் பணியாளர்களுடன் தொடர்புபடுத்துதல் போன்றன இயக்குதலைக் குறிக்கிறது.
- ✓ அமைப்பின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பணியாளர்களை இயக்கும் பொருட்டு சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் கையேடுகள், செய்திமடல்கள், அறிவிப்பு பலகைகள், கூட்டம், பங்கேற்பு இயக்கம் ஆகியவற்றின் மூலமாக பணியாளர்களுக்கு தேவையான அனைத்து விபரங்களுக்கும் உரிய தகவல் தெரிவிக்கப்படுகிறது.

ஒருங்கிணைத்தல்

- ✓ நிறுவனத்தின் அனைத்து செயல்களும் ஒழுங்குபடுத்தும் செயல்பாடுகளின் கீழ் குழு வாரியாகவோ அல்லது பிரிவு வாரியாகவோ பிரிக்கப்படுகின்றன.
- ✓ இத்தகைய குழுவான செயல்பாடுகள் ஒரு நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

**செயலூக்கமளித்தல்**

- ✓ செயலூக்கமளித்தல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்.
- ✓ ஒரு பணியை விரைவாக செய்து முடிக்கவும், பணியாளர்களுக்கு பணியின் மீதான விருப்பத்தை வளர்க்கவும் முடியும்.
- ✓ பணியாளர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப பணிபுரிய சாதகமான பணிச் சூழல், நியாயமான முறையில் நடத்தப்படல், பணம் சார்ந்தமற்றும் பணம் சாராத ஊக்குவிப்புகள், திறம்பட்ட தகவல்தொடர்பு மற்றும் பண்பான அனுகுமுறை ஆகியவற்றையே செயலூக்கத்தின் மூலம் ஏற்படுத்தி தர இயலும்.

2. 43 **குறியிலக்கு மேலாண்மையில் ஈடுபட்டுள்ள செயல்முறைகள் யாவை ?**

- ✓ அமைப்பின் குறிக்கோள்களை வரையறுத்தல்
- ✓ ஒவ்வொரு பிரிவின் இலக்குகள்
- ✓ முக்கிய முடிவுப் பகுதிகள்
- ✓ கீழ்நிலை ஊழியர்களின் குறிக்கோள்களை நிர்ணயித்தல்
- ✓ குறிக்கோள்களுடன் வளங்களை ஒப்பு நோக்குதல்
- ✓ காலவாரியான மறு ஆய்வுக் கூட்டங்கள் கூட்டுதல்
- ✓ செயல்பாடுகளை மறு ஆய்வுக் கூட்டம் கூட்டுதல்.
- ✓ குறிக்கோள்களை மறு ஆய்வு செய்தல்.

அல்லது

43. **பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?**

**பொருளாதாரத்தின் அடிப்படையில்**

(அ) முறையான(செம்மையான) சந்தை

இவ்வகை சந்தையில் ஒரே இயல்பான தன்மை கொண்ட பண்டங்கள் மற்றும் பணிகளை ஒரே விதமான விலையின் அடிப்படையில் கையாளப்படுகிறது.

i. அதிக எண்ணிக்கை உள்ள வாங்குவோர் மற்றும் விற்போரை கொண்டுள்ளது.

ii. பொருட்களின் விலை சந்தை முழுவதும் ஒரே சீராக இருத்தல்.

iii. வாங்குவோர் மற்றும் விற்போர் சந்தையை பற்றி தெளிவாக அறிந்திருத்தல்.

iv. பொருட்கள் தங்கு தடையின்றி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு வழிவகைசெய்கிறது.

**(ஆ) முறையற்ற அல்லது செம்மையற்ற சந்தை**

இவ்வகை சந்தை பல்வகை பொருட்கள் மற்றும் பல்வேறு விலைகளை கொண்டுள்ளது. ஒரே தன்மை மற்றும் விலைகொண்ட பொருட்கள் இச்சந்தையில் மேற்கொள்ளப்படமாட்டாது.

I பொருட்களின் ஒத்த தன்மை இன்மை

ii. விலையில் ஏற்ற தாழ்வு

iii. தகவல் தொடர்பில் குறைபாடு

iv. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொருட்களை கொண்டு செல்வதில் உள்ள தடைகள்.

44. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை **விவரி** ?

**வேலைப் பகிர்வு**

- ✓ இக்கோட்பாட்டின்படி தொழிலமைப்பின் மொத்தப்பணிச் சுமையும் சிறிய பணிகளாகப் பகிர்வு செய்யவேண்டும்.
- ✓ தொழிலாளர்ஒவ்வொரு தொழிலாளியின் திறமைக்கேற்ப பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணியில் அத்தொழிலாளி சிறப்பீடுபாடும் நிபுணத்துவமும் அடையும் வண்ணம் தொழில்முறை வளர்ச்சியையும் பணிச்சூழலையும் உருவாக்கவேண்டும்.
- ✓ இதன்மூலம் உற்பத்தி அதிகரிப்பதுடன் தொழிலாளியின் உழைப்புச் செயல்திறன் அதிகரித்து நிபுணத்துவத்திற்கு வழி வகுக்கும்.

அதிகாரமும், பொறுப்பும்

- ✓ தங்களது கட்டளையின்மூலம் விளைந்தவிளைவுகளுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளுதலைக் குறிக்கின்றது.
- ✓ அதிகாரம் என்பது ஒரு அலுவலர் தன் கீழ்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.
- ✓ பொறுப்பு என்பது அவ்வாணையினை நிறைவேற்றம் கடமையைக் குறிக்கின்றது.

ஒழுங்குமுறை

- ✓ இது கீழ்ப்படிதல், மற்றவர்களிடம் முறைப்படி நடத்துதல், அதிகாரத்தை மதித்தல் போன்றவை ஆகும்.
- ✓ இவ்வொழுங்கு நிறுவனம் செம்மையாக நடைபெற இன்றியமையாததாகும்.

கட்டளையொருமை

- ✓ ஒவ்வொரு கீழ்ப்பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரியிடமிருந்து மட்டுமே கட்டளைகளைப் பெற வேண்டும். அவருக்கு மட்டுமே கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும்.
- ✓ அவ்வாறன்றி ஒரு கீழ்ப்பணியாளர் ஒன்றுக்கு மேற்பட்ட உயர்அதிகாரியிடம் உயர் ஆணைகளைப் பெற்றுச் செயல்பட வேண்டியிருந்தால் அது குழப்பத்தையும் முரண்பாடுகளையும் உருவாக்கி விடும்.

ஆணையுரிமைவரிசை/ தரவரிசைத் தொடர்

- ✓ ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வருவதை குறிக்கும்.
- ✓ உயர்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரைஅனைத்து மேலாளர்களையும் அனைத்து மட்டங்களிலும் இணைப்பதன்மூலம் அதிகாரப்பூர்வமான தெளிவான ஒரு ஆணையுரிமை வரிசை இருக்க வேண்டும்.
- ✓ இதுவே ஆணையுரிமை அல்லது தரவரிசைத் தொடர் ஆகும்.

ஒரு முனைஇயக்கம்

- ✓ அனைத்துத் தொடர்புடைய நடவடிக்கைகளையும் ஒரே குழுவில் வைக்க வேண்டும். அக் குழுவிற்கு ஒரே செயல்திட்டம் இருக்க வேண்டும்.
- ✓ அவர்கள் ஒரே மேலாளரின் கீழ் பணியாற்ற வேண்டும். ஒரே நோக்கத்தினைக் கொண்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு ஒரே செயல் திட்டம் இல்லாமல் இருக்குமாயின் அந்நோக்கம் நிறைவேறாமல் போகலாம்.

அல்லது

44. பணியமர்த்தல் கொள்கைகளை **விளக்குக**.

முதலில் வேலை, அடுத்து மனிதர்

- ✓ பணியின் தேவைக்கேற்ப பணியாளர் வேலையில் அமர்த்தப்பட வேண்டும்.
- ✓ வேலைக்கு தேவைப்படும் விண்ணப்பதாரர் மற்றும் அவரது தகுதியில் எவ்விதமான சமரசமும் இருக்கக்கூடாது.
- ✓ "முதலில் வேலை அடுத்து மனிதர்" என்பது வேலைவாய்ப்பு கொள்கைகளாக இருக்கவேண்டும்.

வேலை வாய்ப்பு

- ✓ புதிய ஊழியர்க்கு தகுதிக்கு அதிகமான அல்லது குறைவான வேலை வழங்கப்படக்கூடாது.
- ✓ தகுதியை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களுக்கு வேலைவழங்கப்பட வேண்டும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

- ✓ பணி தொடர்பாக பணியிடத்தில் நிலவும் விதிமுறைகள் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை பணியாளர் பரவலாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

அபராதங்கள் ற்றிய விழிப்புணர்வு

- ✓ ஊழியர்தவறு செய்தாலோ அல்லது அவரால் ஏதேனும் இழப்பு ஏற்பட்டாலோ அதன் காரணமாக அவருக்கு வழங்கப்படும்

தண்டனைமற்றும் அபராதம் குறித்த விழிப்புணர்வினை அவர் பெற்றிருக்க வேண்டும்.

விசுவாசம் மற்றும் ஒத்துழைப்பு

- ✓ பணியாளர்களுக்கு பணியமர்த்தும் போது அவருக்குள் விசுவாசம் மற்றும் ஒத்துழைப்பு உணர்வினை வளர்க்கும் முயற்சியினை மேற்கொள்ள வேண்டும்.
- ✓ அதன் மூலம் அவர் வேலை மற்றும் நிறுவனம் குறித்த அவரது பொறுப்புகளை சிறப்பாக உணர்ந்து கொள்ளஇயலும்.

45. ஆட்சேர்ப்பின் பல்வேறு முறைகளை விளக்குக.

- ✓ அக வளங்கள்:
- ✓ இடமாற்றம்
- ✓ ஒரு துறையில் இருக்கும் உபரி பணியாளர்களை பற்றாக்குறை உள்ள மற்ற துறைகளுக்கு பணி மாற்றம் செய்வதன் மூலம் காலி பணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை எளிமையான வழியில் நிரப்பலாம்.
- ✓ **மேம்படுத்துதல்:**
- ✓ பணியாளர்கள் கீழ்மட்ட நிலையிலிருந்து மேல்மட்ட நிலை நோக்கி செல்ல செயல்திறன் மதிப்பீட்டு முறை உதவுகிறது.
- ✓ **பதவி உயர்வு:**
- ✓ பணிமூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில் பணியாளர்கள் நிறுவன அமைப்பின் படிநிலையில் உள்ள கீழ்மட்ட நிலையிலிருந்து மேல்மட்ட நிலைக்கு சென்று பணி புரிய வாய்ப்பு அளிக்கப்படுகிறது.
- ✓ **பதவி இறக்கம்:**
- ✓ பணியில் தொடர்ந்து குறைவான செயல்திறனை வெளிப்படுத்தும் பணியாளர், செயல்திறனின் முக்கியத்துவத்தை உணரும் வகையில் அவரை மேல்நிலை பணியிலிருந்து கீழ்நிலைபணிக்கு மாற்றிவிடுவது பதவி இறக்கம் எனப்படுகிறது.
- ✓ **பழைய ஊழியர்களின் பரிந்துரை:**
- ✓ பழைய பணியாளர்களை திருப்திப்படுத்த அவர்களது உறவினர்கள் அல்லது நண்பர்களை வேலைக்கு அமர்த்தலாம்.
- ✓
- ✓ **புற வளங்கள் –**
- ✓ நேர்முகத் தேர்வு:
- ✓ வேலைதேடி நிறுவனத்திற்கு நேரடியாக வருபவர்களைநேர்முக தேர்வின் மூலமாகவும் பணியமர்த்த முடியும்
- ✓ **வளாக தேர்வு:**
- ✓ கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக சென்று நல்ல கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்களை வளாகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கலாம்.
- ✓ **தொழிற்சாலை வாயிலில் ஆட்சேர்ப்பு:**
- ✓ பொதுவாக சாதாரண அல்லது தற்காலிக திறனற்ற ஊழியர்கள் இந்த வழியின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர்.
- ✓ போட்டி **நிறுவனங்**கள்: உயர் ஊதியம் மற்றும் அதிக பலன்கள் வழங்குவதன் மூலம் போட்டி நிறுவனங்களில் உள்ள திறமையான பணியாளர்களை தம்முடைய நிறுவனத்தில் பணியாற்ற ஈர்க்கும் செயல் பணியாளர்வேட்டை என அழைக்கப்படுகிறது.

அல்லது

45. பல்வேறு வகையான நிதிச் சந்தைகளை விவரிக்க.

<u>நிதி கோருதல் வகையின் அடிப்படையில்</u>

- ✓ **கடன் சந்தை** – கடன் கருவிகளை வர்த்தகம் செய்வதற்கான நிதிச் சந்தை கடன் சந்தை ஆகும். அரசு பத்திரங்கள்(அ) பிணையங்கள், நிறும கடனீட்டு பத்திரங்கள் போன்றன.
- ✓ **சம நிலை பங்குச் சந்தை** – நிறுமச் சமநிலை பங்குகளின் வணிகத்திற்கான நிதிச் சந்தை சமநிலை பங்குச் சந்தை ஆகும்.
- ✓ நிதி **கோருத**லின் அடி**ப்**படையில் – பணச்சந்தை – குறுகிய கால, ஓராண்டு அல்லது அதற்கு குறைவாக நிதி கோருதலுக்கான நிதிச் சந்தை பணச் சந்தை ஆகும்.
- ✓ **மூலதனச் சந்தை** –நீண்டகால ஓராண்டுக்கு மேல் நிதி கோருதலுக்கான சந்தை மூலதன சந்தை ஆகும். எ.கா. பங்குகள், கடனீட்டுப்பத்திரங்கள் போன்றவை.

<u>நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில்</u>

- ✓ **முதல் நிலைச்சந்தை** – நிறுமங்கள், வெளியீட்டாளர்கள் முதன்முதலில் பத்திரங்களை விற்பனை செய்வதில் பங்கு பெறும் அனைத்து நிறுவனங்களையும் உள்ளடக்க பயன்படுத்தப்படும் சொல் முதல் நிலைச்சந்தை எனப்படும்.
- ✓ **இரண்டாம் நிலைச் சந்தை** – ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச்சந்தை ஆகும்.

குகை மேல்நிலைப் பள்ளி

காலாண்டுத் தேர்வு – +2 வணிகவியல் விடைக்குறிப்புகள் 2019 -20

- ✓ இரண்டாம் நிலைச் சந்தையில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.

நிதி கோருதலின் வழங்கலின் கால அடிப்படையில்

- ✓ ரொக்கம் (அ) உடனடிச்சந்தை – ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச்சந்தை ஆகும்.
- ✓ அதாவது தீர்வு உடனடியாகநடைபெறுகிறது.
- ✓ முன்னோக்கிய (அ) எதிர்காலசந்தை – சொத்து வழங்கலும் ரொக்கம் செலுத்தலும் முன்னரே தீர்மானிக்கப்பட்டு எதிர்காலத்தில் நடைபெறும் சந்தை எதிர்காலசந்தை ஆகும். பின்னொரு நாளில் பொருட்களை கைமாற்றிக் கொள்வதற்காக இன்றே விலையை முடிவு செய்து கொள்ளும் சந்தை ஆகும்.

நிதிச் சந்தை அமைப்பின் அடிப்படையில்

- ✓ **பரிமாற்றக வர்த்தகச் சந்தை** – ஒரே ஒழுங்கு நடைமுறைகளை கொண்ட மைய அமைப்பு
- ✓ உடனடி சந்தை – வழக்கமான நடைமுறைகளைக் கொண்ட பரவலாக்கப்பட்ட சந்தை

46. **அரசுப் பத்திரங்களின் இயல்புகளை விவரி.**

முகமைகள் –

- ✓ மத்திய அரசு, மாநில அரசுகள், அரசாங்க அமைப்புக்கு இணையான அமைப்புகள் போன்றவை மூலம் அரசு பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன.

இந்திய ரிசர்வ் வங்கியின் சிறப்பு பணி –

- ✓ இந்திய ரிசர்வ் வங்கி அரசு பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது.
- ✓ குறிப்பாக பண மேலாண்மையில் சிறப்பாக செயல்படுகிறது.

**பத்திரங்களின் இயல்பு –**

- ✓ அரசு பத்திரங்கள் உத்தரவாதமாக வட்டி வழங்குவதால் அதில் முதலீடு செய்வது பாதுகாப்பானதாகவும் மேலும் அரசே முதன்மை தொகையை திரும்ப செலுத்துவதால் முற்றிலும் பாதுகாப்பு தன்மை கொண்டதாகவும் இருக்கிறது.

**பணப் புழக்க விபரம் –**

- ✓ தங்க முனை பத்திரங்கள் பலவகை நீர்மை தன்மை கொண்டவை.
- ✓ அதன்படி மத்திய அரசால் வழங்கப்பட்ட பத்திரங்கள் அதிக நீர்மைதன்மை கொண்டதால் அதன் பணப்புழக்கமும் அதிகமாக இருக்கும்.

**வரிவிலக்கு –**

- ✓ முதலீட்டாளர்களுக்கு பரந்த அளவில் வரிவிலக்கு அளிப்பது இந்த அரசு பத்திரங்களின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது.
- ✓ இந்த பத்திரங்கள் இந்த நன்மைக்காகவே மிகவும் பிரபலமானதாக உள்ளது.

**ஏலமிடுதல் –**

- ✓ வர்த்தகர்கள் ஒருவர் ஒருவரோடு போட்டியிடும் முறையில் பத்திரங்களை அதிகபட்ச விலைக்கு விற்க மேற்கொள்ளப்படும் ஒரு வர்த்தக முறையே ஏலம் விடுதல் ஆகும்.

அல்லது

46. செபியின் **அதிகாரங்களை** விவரி.

பங்குச்சந்தைகள் மற்றும் இடைத்தரகர்கள் தொடர்பான அதிகாரங்கள்

- ✓ பத்திர வணிகத்தை மேற்கொள்ளும் பங்கு மாற்றகங்கள் மற்றும் இடைத்தரகர்களிடம் செபி பரந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது.
- ✓ ஆய்வு மற்றும் கூர்ந்தாய்வு மற்றும் பிறநோக்கத்திற்காக வணிகபரிவர்த்தனைகளில் பங்குச்சந்தை மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து தகவலை கேட்கலாம்.

நாணய அபராதங்களை விதிக்கும் அதிகாரம்

- ✓ மூலதனசந்தை இடைத்தரகர்கள் மற்றும் பிறபங்கேற்பாளர்கள் மீது வரம்பு மீறல்களுக்கு நாணய அபராதங்களை சுமத்துவதற்கு செபி அதிகாரத்திற்கு உட்பட்டுள்ளது.
- ✓ இது ஒரு குறுகிய காலத்திற்கு தங்கள் பதிவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

பணியிடங்களில் செயல்பாடுகளை தொடங்குவதற்கான அதிகாரம் ஒதுக்கப்பட்டுள்ளது

- ✓ செபி ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் குறித்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஒரு அதிகாரம் உண்டு. உதாரணமாக, இது பல்வேறு இடைத்தரகர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கலாம் அல்லது முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான குறிப்பிட்ட விதிகளை அறிமுகப்படுத்தலாம்.

பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரம்

- ✓ உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அல்லது வணிக வங்கியாளர்களின் பணிகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை செபி கொண்டுள்ளது.

பத்திரங்கள் ஒப்பந்த சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள்

குகை மேல்நிலைப் பள்ளி

காலாண்டுத் தேர்வு – +2 வணிகவியல் விடைக்குறிப்புகள் 2019 -20

- ✓ பங்குச்சந்தை திறம்பட ஒழுங்குபடுத்த நிதி அமைச்சகம் பத்திரங்கள் ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பல்வேறு அதிகாரங்களைசெபிக்கு 13 செப்டம்பர், 1994 அன்று ஒரு அறிவித்தல் மூலம் வழங்கியுள்ளது.
- ✓ ஒவ்வொரு பங்குச்சந்தையிலும் ஆளும் குழுவில் மூன்று உறுப்பினர்களை நியமிக்க நிதி அமைச்சகம் செபிக்கும் அதிகாரம் அளிக்கிறது.
- ✓ பங்குச்சந்தை வணிகத்தை ஒழுங்குப்படுத்தும் அதிகாரம்

பத்திரச் சந்தைமற்றும் பரஸ்பர நிதியுடன் தொடர்புடைய இடைநிலையர்கள், மோசடியான மற்றும் முறையற்ற வியாபார செயல்பாடுகள் மற்றும் நிறுவனங்கள் ஒருங்கிணைப்பு போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை செபி கொண்டுள்ளது.

**47. மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக.**

மனித சக்தி தேவைகளை அடையாளம் காணுதல்:

- ✓ ஒரு நிறுவனத்தில் மனிதவள தேவைகளைத் தீர்மானிப்பது என்பது மிகவும் முக்கியமான ஒரு முதலீட்டு முறையாகும்.
- ✓ செலவுகளை மேம்படுத்த, நிறுவனத்திற்கு தேவைப்படும் நபர்களின் எண்ணிக்கையை துல்லியமாக அடையாளம் காணப்பட வேண்டும்.

மாற்றங்களை இணைத்துக்கொள்ளல்:

- ✓ மாற்றம் என்பது எந்த அமைப்பிலும் நிலையானது மற்றும் இந்த மாற்றத்தை நிறுவனத்தில் திறன்பட அறிமுகப்படுத்த மனித வள மேலாண்மை ஒரு முகவராக செயல்பட வேண்டும்.

**மனித சக்தியின் சரியான தேவையை உறுதி செய்தல்:**

- ✓ மனிதவள மேலாண்மையின் மூலமாக நிறுவனத்தில் எந்த நேரத்திலும் பணியாளர்கள் பற்றாக்குறை அல்லது உபரி ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

சரியான வேலைக்கு சரியான நபரை தேர்ந்தெடுத்தல்:

- ✓ சரியான வேலைக்கு சரியான தகுதியுடைய நபர்களை மனிதவள மேலாண்மை உறுதிப்படுத்துவதால், நிறுவனத்தில் குறைதகுதி அல்லது மிகைதகுதி உடைய பணியாளர்கள் இல்லாத நிலை ஏற்படுகிறது.

திறன் மற்றும் அறிவை மேம்படுத்துதல்:

- ✓ பணியாளர்திறன் மற்றும் அறிவு மேம்பாடு செயல்பாடுகளை நிர்வகிப்பதில் மனித வள மேலாண்மையின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தாக இருப்பதோடு மட்டுமில்லாமல் பயிற்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள்மூலம் இன்று வரைஇருக்கும் தொழில் சார்ந்த அறிவை பணியாளர்களுக்கு வழங்குகிறது.

பணியாளர்களின் செயல்திறனை மதிப்பிடுதல்:

- ✓ மனித வள மேலாண்மை நடவடிக்கைகள் மூலம் குறிப்பட்டகால இடைவெளிகளில் பணியாளர்களின் செயல்திறன்களை மதிப்பீடு செய்வதால் நன்கு பணிபுரிவோரின் திறனை அதிகரிக்கவும், மெதுவாக பணிபுரிவோர்களை ஊக்கமளிக்கவும் முடிகிறது. பணியாளர்கள் தங்களின் செயல்திறன் நிலையை அறிய இது உதவுகிறது.

அல்லுத

**47. பங்குச் சந்தையினால் சமுதாயத்திற்கான பயன்களை விவரி ?**

சமுதாயத்திற்கான பயன்கள் ;–

**பொருளாதார வளர்ச்சி**

- ✓ உற்பத்தித் தேவைகளுக்காக நிலையான சேமிப்புகளை உறுதிப்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை இது துரிதப்படுத்துகிறது.

**நிதி திரட்டல் தளம்**

- ✓ இது நன்கு நிர்வகிக்கப்பட்ட, லாபத்தை உருவாக்கும் நிறுவனங்கள் அவ்வப்போது புதிய பங்குகளின் மூலம் வரம்பற்ற நிதியை திரட்டஉதவுகிறது.

வளங்களை மாற்றுதல்

- ✓ வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி, நிறுவனத்தை செம்மையாக இயக்குவதற்கு வளங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

**PREPARED BY**
**G. PRAKASH. M.COM. M.PHIL. B.ED.D.TED**
**GUGAI HR. SEC. SCHOOL. SALEM -6**
**9488270034**